# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | C.C.13/2026 | Date | : | 24-08-2026 |
| Deposition of Witness for | : | அ.சா.3 | Taluk | : | |
| Name | : | திரு.செந்தில்குமார் | Calling | : | |
| Father/Husband Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 24.08.2026.
(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்ட காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணையான காவல் ஆய்வாளர் திரு.ரமேஷ், அவர்கள் பணிமாறுதலில் சென்றுவிட்டதால், அவருடன் பணியாற்றிய வகையில் அவரது கையொப்பம் எனக்கு நன்கு பரீட்சையம் என்பதால் அவருக்கு பதிலாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 27.08.2025 ம் தேதி, இரவு சுமார் 09.00 மணிக்கு சங்ககிரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக திரு.கண்ணன் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது, முன்னதாக ஈரோடு கருங்கல்பாளையம் தன்வந்திரி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற சுமன், த/பெ.ஏழுமலை, என்பவரின் சாலை விபத்து காயத்தகவலின்பேரில் மேற்படி மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது அடிப்பட்டவர் மயக்க நிலையில் இருந்ததால் உடனிருந்த அவரது தந்தை ஏழுமலை, என்பவரை விசாரித்து பெற்று வந்து

ஒப்படைத்த வாக்குமூலத்தின்பேரில் சங்ககிரி காவல் நிலைய குற்ற எண்.369/2025, சட்டப்பிரிவுகள் 281, 125(a) of BNS-ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசலை, வாதியின் புகார் வாக்குமூலத்துடன் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி அவர்களுக்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

2) பின்னர், கடந்த 28.08.2025 ம் தேதி, காலை சுமார் 08.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் பிரபாகரன் மற்றும் கௌதம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார் **(பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் சம்பவயிட சாட்சிகள் சரவணன், பிரபாகரன், கௌதம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3) பின்னர், விபத்தில் காயம்பட்டு ஈரோடு தன்வந்திரி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த சுமன் மேல்சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் வழியிலேயே கடந்த 31.08.2025 ம் தேதி, இரவு சுமார் 09.00 மணிக்கு இறந்துவிட்டதாக கிடைத்த இறப்பு தகவலின் பேரில் அன்றைய தினமே, இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 281, 125(a) of BNS-லிருந்து சட்டப்பிரிவுகள் 281, 106(1) of BNS ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி அவர்களுக்கு அனுப்பி

வைத்துள்ளார். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4) பின்னர், கடந்த 01-09-2025 ம் தேதி, காலை சுமார் 10.00 மணிக்கு சங்ககிரி அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன சுமன், என்பவரின் பிரேதத்தின் மீது காலை சுமார் 10.00 மணிமுதல் பிற்பகல் 12.00 மணிவரை பஞ்சாயத்தார் சாட்சிகள் முன்பாக பிரேத விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். பின்னர் பிரேதத்தை இறப்பிற்கான காரணம் அறிய பிரேத பரிசோதனை செய்ய வேண்டி விபத்தில் இறந்துபோன சுமன் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய நிலைய தலைமை காவலர் திரு.செல்வகுமார், என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்துள்ளார். **(பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் பிரேத விசாரணை சாட்சிகள் சந்தியாராணி, சின்னமயிலி, ரங்கசாமி, தீபா ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5) பின்னர், சாட்சிகளை விசாரணை செய்ததில் முருகேசன், த/பெ.முத்துராஜ், என்பவர் TN 83 V 3457 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Comet வாகனத்தை அஜாக்கிரதையாகவும், எந்தவித எச்சரிக்கையும் செய்யாமல் லாரியை திடீரென பிரேக் போட்டு நிறுத்தி விபத்தை ஏற்படுத்தியது உண்மையென தெரிந்து இவ்வழக்கின் எதிரி முருகேசன், த/பெ.முத்துராஜ், என்பவரை தேடிவந்த நிலையில் கடந்த 01.09.2025 ம் தேதி, மாலை சுமார் 04.30 மணிக்கு சங்ககிரி காவல் நிலையம் முன்பு வைத்து கைது செய்து தக்க இருநபர் நிலைய பிணையில் விடுவித்து

இவ்வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு.ரமேஷ், அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார்.

6) பின்னர், கடந்த 04-09-2025 ம் தேதி இவ்வழக்கில் விபத்தை ஏற்படுத்திய TN 83 V 3457 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Comet வாகனம் மற்றும் கடந்த 27-11-2025 ம் தேதி விபத்திற்குள்ளான TN 30 AE 6177 என்ற பதிவு எண் கொண்ட Honda Shine இருசக்கர வாகனம் ஆகியவற்றை சங்ககிரி மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

7) பின்னர், கடந்த 26-11-2025 ம் தேதி, TN 83 V 3457 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Comet வாகனம் மற்றும் TN 30 AE 6177 என்ற பதிவு எண் கொண்ட Honda Shine இருசக்கர வாகனம் ஆகியவற்றை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளரான திரு.செந்தில்குமார், என்பவரை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை பெற்றுள்ளார் ( **TN 83 V 3457 என்ற பதிவு எண் கொண்ட Ashok Leyland Comet வாகனம் மற்றும் TN 30 AE 6177 என்ற பதிவு எண் கொண்ட Honda Shine இருசக்கர வாகனம் ஆகியவற்றின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள் முறையே அ.சா.ஆ.7 மற்றும் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் ஆகியவை கு.வி.மு.ச. பிரிவு 294-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) பின்னர், அன்றைய தினமே, ஈரோடு தன்வந்திரி மருத்துவமனை சென்று இவ்வழக்கில் காயம்பட்டு மருத்துவமனைக்கு வந்த சுமன், என்பவரின் விபத்து பதிவேட்டு அறிக்கையை பெற்றுள்ளார் (**விபத்து பதிவேட்டு அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

9) பின்னர், கடந்த 26-11-2025 ம் தேதி, இவ்வழக்கில் இறந்துபோன சுமன், என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த சங்ககிரி அரசு மருத்துவமனை டாக்டர்.ராசிமுத்து, என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடமிருந்து பிரேத பரிசோதனை அறிக்கையை பெற்றுள்ளார் (**பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

10) பின்னர், வாதி ஏழுமலை என்பவரை விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பிரேத விசாரணை அலுவல் பணிக்கு சென்ற தலைமை காவலர் திரு.செல்வகுமார் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதற்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் திரு.கண்ணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அத்துடன் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) of BNS - ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

<u>**குறுக்கு விசாரணை**</u> :-

நான் சொன்னவாறு, சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், சம்பவ இடமே செல்லாமல் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பொய்யாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கும், இந்த விபத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும், சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிமீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-S.Sathiya,

Sd/-Senthilkumar

Judicial Magistrate No.1,

Sankari.